1974 ஏப்ரல் 9] [திரு. க. அன்பழகன்]

விதமாக வயிற்றுலே இருந்தது. இதில் 2 பேர் இறக்க நேரிட்டது. இதில் இன்றைய தினம் 40 பேர்கள் கவனிக்கப்படத் தக்க நிலையில் இருக்கின்றனர். அவர்களில் எவ்வளவு பேருக்கு காலரா இருக்கிறது என்பது தெரியவில்லை.

ஆனல் அந்த வட்டாரம் முழுவதும் 1, 10, 915 பேருக்கு ஊசி போடப்பட்டு தொடர்ந்து போடப்பட்டு வருகிற காரணத்தாலும், குடிநீர் மேலும் பாதுகாப்பாக இருக்க கவனம் செலுத்துவது காரணமாகவும் எளிதாக காலரா பரவக் கூடிய வழி முறைகளில்லை. அதிகம் கவனம் செலுத்தப்பட்டு விரைவில் தடுக்கப்படும், நிறுத்தப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன். இந்த அடிப்படையில் விவரங்கள் இருக்கிற காரணத்தால் ஒத்திவைப்பு தீர்மானத்திற்கு அவசியமில்லை என்பதை தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இப்பொருள் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்ற காரணத்தால் இத்தீர்மானத்திற்கு அனுமதி தாமறுக்கிறேன்.

(ஆ) கோவை மாவட்டத்தில் 100-ம் நெம்பர் நூல் கிடைக்காமையால் கைத்தறி நெசவாளர்களின் அல்லல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். கே. பழனிசாமி அவர்கள் கைத்தறி நெசவாளர்கள் பிரச்னை பற்றி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிருர்கள். சபையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அளவுக்கு இது எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி விளக்குவார் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : கோயம்புத்தூர் ஜில்லாவில் 100 நெம்பர் யார்ன் இன்றைய தினம் கிடைக்காமல் மிகவும் கைத்தறி நெசவாளர்கள் கஷ்டப்படுகிருர்கள். குறிப்பாக கோயம்புத்தூர் ஜில்லா என்று சொன்னல் சூலூர், கோயம்புத்தூர், ஈரோடு தாலுக்காக்களில் பெருவாரியான நெசவாளர்கள் இதை நம்பித்தான் இருக்கிருர்கள். 20 ஆயிரம் கைத்தறி நெசவாளர்களுக்கு வேலையில்லை என்றுல் 1 லட்சம் குடும்பங்களுக்கு ரொம்பவும் கஷ்டமான நிலைமை. நூல் கிடைக்கவில்லை. மில் முதலாளிகளிள் கூட 2 கோடி ரூபாய்க்கு பெறுமான நூல் தேக்கமிருக்கிறது. சர்க்கார் நடவடிக்கை எடுக்கத் தவறிய காரணத்தால் தான் இந்த நூலை எடுத்து அவர்களுக்கு கொடுக்காத காரணமாக தேக்கமிருக்கிறது என்றும், எங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்றும் கூறுகிருர்கள், ஆகவே, சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்க

வேண்டுமென்று சொல்லியும் கூட சர்க்கார் இது வரையில் எடுத்து அவர்களுக்கு சரியான வினியோகம் செய்யாதிருப்பதை இந்த சபையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே ஆலைகளிலே ஏராளமான நூல்கள் இருந்தும், அதை விற்கக் கூடிய அதிகாரம் மத்திய அரசினுடைய டெக்ஸ்டைல் கமிஷனரால் தரப்பட வேண்டுமென்றும், அதைப் போல அதனுடைய விலையை நிர்ணயிக்கக் கூடிய அதிகாரம் அவரால் தரப்பட வேண்டுமென்று சட்டப்படி உண்மையாகும். அது மாறி மாறி வருகிறது. 12—2—1974-ந் தேதி அன்று விலைக் கட்டுப்பாடு நீக்கப்பட்டது என்ற உத்திரவை டெக்ஸ்டைல் கமிஷனர் அறிவித்தார்கள். பிப்ரவரி மாதம் அறிவிக்கப்பட்ட பின்னல் விலை கட்டுப்பாடு இல்லாமல் நூலை மட்டும் நாம் வினியோகிக்க வாய்ப்பிருக்கிறது என்று தெரிவித்தார்கள். இப்பொழுது அதையும் சென்ற மாதம் எடுத்துவிட்டார்கள். ஆகவே டெக்ஸ்டைல் கமிஷனரின் உத்திரவு விலை கட்டுப்பாடு இல்லாமல் நாம் நூலை வாங்கலாம் என்றும் அது வந்து சில நாட்களுக்காக அந்தக் கட்டுப்பாடும் இல்லை என்று வந்து விட்டது. நம்மைப் பொறுத்த வரையில் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம். இதுபற்றி எற்கனவே இந்த மாமன்றத்தில் பல முறை விவாதிக்கப்பட்டிருக்கிறது.

இருந்தாலும், நம்மால் இயன்ற அளவுக்கு மாநில அரசு ஆலை உரிமையாளர்களையெல்லாம் அழைத்து எந்த அளவுக்கு நூல் வினியோகத்தைச் சீர்படுத்தலாம் என்பதை பரிசிலித்து வருகிறோம். நம்முடைய அரசாங்க ஆலைகள், கூட்டுறவு ஆலைகளைப் பொறுத்த வரையில் எப்பொழுதும் கூட்டுறவுத் துறையிலே தேவையான நூலை நமக்கு கிடைக்க முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகிறோம். தனியார் துறையைப் பற்றிய அந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கூறி அனுமதி மறுக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

(அ) சீர்காழி தாலுக்காவில் தண்ணீர் இன்மையால் குள்ளக்கார் பயிர் சாகுபடி பாதிப்பு குறித்து.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் சீர்காழி தாலுக்காவில் கடந்த சில நாட்களாக தண்ணீர் இல்லாத காரணத்தால் சுமார் 60,000 ஏக்கராவில் பயிரிடப்பட்டுள்ள குள்ளக்கார் என்ற பயிர்